முருகப்பெருமான் துணை

**மகான் நரசிங்க முனைய நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.08.2022, திங்கட்கிழமை

1. அருட்பெருஞ் சக்தியாக வந்தநல்
ஆறுமுக அரங்கமகா ஞானியே
வரம்தரும் ஆறுமுகனார் சித்தியே
வள்ளலே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது நள்ளி திங்கள்
குறைவிலா மூவேழீர் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 23 நாள், 08.08.2022 திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு நரசிங்க முனைய நாயனார் யானும்
3. யானும் உலகநலம் பெற உரைப்பேன்
உண்மை ஞானம் தந்தருளும்
ஞானதேசிகனை குருவாக ஏற்று
நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே ஆற்றல் பலம் தானும்
வள்ளல் தன்மையாக மாறும்
தருகின்ற குணமும் செயலும்
தன்னார்வ தொண்டாக உயரும்
5. உயர்வான சிந்தைகள் பெருகி
ஊழதை வெல்லும் சக்தியும்
தயவே வடிவான வாழ்வும்
தரணி காக்கும் சேவை ஈடுபாடும்
6. ஈடுபாடும் பெருகி இனிதே
எல்லோரும் சமம் எனும்
திடமும் சமத்துவ உணர்வும்
தெளிவும் ஞானமும் கூடும்
7. கூடுமே பொருள் பற்றெனும்
குறிப்பாக சுயநலமில்லா
நாடு மக்கள் நலம் பேணும்
ஞானவான்களாக மாற்றம்
8. மாற்றம் கண்டு நன்கு
மண்ணுலகை காக்கின்ற
ஆற்றல் மிக்க ஞானத்தலைமை
அகிலம் கண்டு உயரும்
9. உயரும் ஞான ஆட்சியாக
உண்மையை காத்து வழிநடத்தி
தயவுடன் ஆளுமை புரியும்
தலைமைகள் எங்கும் பெருகி

10. பெருகியே உலகினில் இனி
பேரிடர் துன்பம் எதுமிலா
முருகப்பெருமானை ஏற்ற
முழுமை பெற்றவர்களை கொண்ட

11. கொண்ட ஆளுமை ஆகவே
குவலயம் சிறந்து விளங்கும்
தொண்டுநிறைந்த தெய்வ ஆட்சியாகும்
தெரிவித்த அருளாசி முற்றே

–சுபம்–